**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**செய்தி வெளியீட்டு எண் 90/2025** நாள் 11.07.2025

**செய்திக்குறிப்பு**

**ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (தொகுதி–4) – தேர்வு நாள் 12.07.2025**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (தொகுதி–4) தேர்வு நாளை 12.07.2025 அன்று முற்பகல் நடைபெற உள்ளது. இந்த தேர்வுக்கான வினாத்தாள், OMR விடைத்தாள் உள்ளிட்ட மந்தணப் பொருட்கள் சென்னை தேர்வாணைய அலுவலகத்திலிருந்து, மாவட்ட கருவூலங்களுக்கு அனுப்பப்பட்டு பாதுகாப்புடன் வைக்கப்பட்டன.

இத்தேர்வானது 314 வட்டங்களில் நடைபெற உள்ளதால் மேற்படி வினாத்தாள், விடைத்தாள் அடங்கிய மந்தணப் பொருட்கள் மாவட்ட கருவூலங்களிலிருந்து வட்டத் தலைநகரங்களிலுள்ள சார்நிலை கருவூலங்களுக்கு நேற்று முதல் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

மந்தணப் பொருட்களை மாவட்ட கருவூலங்களிலிருந்து சார்நிலை கருவூலத்திற்கு ஆயுதமேந்திய காவலர் பாதுகாப்புடன் வாகனங்களில் வட்டாட்சியர் / வருவாய் அலுவலர் எடுத்துச் செல்வர். அவ்வாறே மதுரை மாவட்டம் உட்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் எடுத்து செல்லப்பட்டு சார்நிலை கருவூலங்களில் தற்போது பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நாளை காலை மேற்படி மந்தணப் பொருட்கள் சார்நிலைக் கருவூலங்களிலிருந்து உரிய காவல்துறை பாதுகாப்புடன் அனைத்து தேர்வு மையங்களுக்கும் எடுத்துச் செல்லப்படும்.

தேர்வினை பாதுகாப்பான முறையில் நடத்திட அனைத்து நடவடிக்கைகளையும் தேர்வாணையம் எடுத்துள்ளது.

**அ. ஜான்லூயிஸ், இ.ஆ.ப.**
**தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்**